**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**
OS.676/2018

நாள். 27.06.2022

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 27.06.2022ம் நாளாகிய இன்று திரு.ரத்தினவேல், Gr-II பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி: | :.வா.சா.2 | ஜாதி | : |
| பெயர் | அபிராமி | தொழில் | : |
| த/பெ. | : | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**முதல் விசாரணை**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் ஓமலூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் தட்டச்சராக வேலை செய்கிறேன். எனக்கு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் சாட்சியம் அளிப்பதற்கான அனுமதிக் கடிதம். வாகன பதிவு என் டிஎன் 30 AW 1569 என்ற வாகனம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலம் ஓமலூரில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், டிஎன் 30 AW 1569 என்ற வாகனம் என்ன வகையானது என்றால் டிப்பர் லாரி. மேற்படி வாகனம் ராஜ்குமார் த/பெ முருகேசன் என்பவர் பெயரில் 25.01.2012ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கான பதிவு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ 2. சா.சா.ஆ.2 ல் வாகன பதிவு எண் டிஎன் 30 AW 1569 ஐ பொறுத்து எந்த அடமானம் வைத்ததாக பதிவு சான்றில் மேற்குறிப்பும் எதுவும் இல்லை என்றால் சரிதான். ஒரு வாகனம் உரிமையாளரிடமிருந்து வேறு நபருக்கு உரிமை மாற்றம் செய்யும் பொழுது அதற்குரிய படிவங்கள் பெற்ற பின்பு தான் பெயர் மாற்றம் செய்யப்படும். ஒரு நபர் இறந்து விட்டால், அவரது வாரிசு சான்றிதழின் அடிப்படையில் வாகனத்தின் பெயர் மாற்றம் செய்யப்படும். சா.சா.ஆ 2 பதிவு எண் டிஎன் 30 AW 1569 என்ற வாகனம் யார் பெயரில் இருந்து வருகிறது என்றால், ராஜ்குமார் த/பெ முருகேசன் என்பவர் பெயரில் தான்

உள்ளது. வாகன பதிவு எண் டிஎன் 30 BW 9031 வாகனமும் ஓமலூர் வட்டார எல்லைக்குட்பட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலத்தில் தான் பதிவு செய்யப்பட்டது. மேற்படி வாகனமும் ராஜ்குமார் த/பெ முருகேசன் என்பவர் பெயரில் தான் பதிவு செய்யப்பட்டது. டிஎன் 30 BW 9031 வாகனத்தின் பதிவு சான்று நகல் சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களை தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி கேட்டாலும் சான்றுகள் அளிப்போம்.

வாதிகள் கேட்ட தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி ஆவணங்களை எங்களது அலுவலகத்திலிருந்து அளித்தோம், அது தற்போது என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். மேற்படி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படி பெற்ற ஆவணங்கள் வா.சாஆ 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ 16 ஆவணத்தின்படி ராஜ்குமார் த/பெ முருகேசன் என்பவர் பெயரில் தான் வாகனத்தின் பதிவு இருந்து வந்தது என்றால் சரிதான். டிஎன் 30 BW 9031 என்ற வாகனம் தற்போது யார் பெயரில் பதிவு சான்றிதழ் உள்ளது என்றால் விஸ்வநாதன் த/பெ.நல்லியப்பன், குமாரபாளையம், நாமக்கல் என்பவர் பெயரில் உள்ளது. 06.08.2021 வரை மேற்படி ராஜ்குமார் வாகனம் பதிவு இருந்தது. அதற்கு பின்பு 06.08.2021 தேதியிலேயே மேற்படி விஸ்வநாதன் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. எதன் அடிப்படையில் மேற்படி பெயர் மாற்றம் ஏற்பட்டது என்றால் பர்மிட் சரண்டர் செய்ததால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பெயர் மாற்றம் செய்ததற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அவைகள் சா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ராஜ்குமார் பெயரில் இருந்த வாகனத்திற்கு பெயர் மாற்றம் செய்வதற்கு யார் எங்கள் அலுவலகத்தில் மனு அளித்தார்கள் என்றால், தற்போது என்னிடம் குறிப்புகள் எதுவும் இல்லை, அந்த குறிப்புகள் அனைத்தும் சேலம் மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தான் உள்ளது. மேற்படி அலுவலகத்திலிருந்து யார் விண்ணப்பம் அளித்தார்கள் என்பது குறித்த விவரங்களை பெற முடியுமா என்றால் பெற முடியும். இறந்த நபர்களின் வாரிசுகள் இல்லாமல் பெயர் மாற்றம் செய்தால் அது சட்டத்திற்கு எதிரான செயல் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை - இல்லை**

ஒப்பம்/PW2

ஒப்பம் / சார்பு நீதிபதி, ஓமலூர்,